# கேரளப் பாடநூல்

# தமிழ்

வகுப்பு - II

பகுதி 1

Kerala Reader - Tamil
Standard - II
Part 1

கேரள அரசு
கல்வித்துறை

தயாரிப்பு
மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), கேரளம்
2015

JT 395-1/Tamil-2 (Vol-1)

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப சிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காகே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே! ஜய ஹே! ஜய ஹே!
ஜய ஜய ஜய ஜய ஹே!

- மகாகவி இரவீந்திரநாத் தாகூர்

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு.

இந்தியர் அனைவரும் எனது உடன்பிறந்தோர்.

எனது நாட்டை நான் உயிரினும் மேலாக மதிக்கிறேன்.

அதன் வளம் வாய்ந்த பல்வகைப் பரம்பரைப் புகழில் நான் பெருமைகொள்கிறேன்.

அதற்குத்தக நான் என்றும் நடந்துகொள்வேன்.

என் பெற்றோர், ஆசிரியர், மூத்தோர் இவர்களை நான் நன்கு மதிப்பேன்.

எல்லாருடனும் நான் பண்புடன் பழகுவேன்.

எனது நாட்டினிடமும் நாட்டு மக்களிடமும் பக்தியுடன் இருப்பேன் என உறுதி கூறுகிறேன்.

அவர்களின் நலத்திலும் வளத்திலும்தான் எனது இன்பமும் அடங்கியிருக்கிறது.

Prepared by :
State Council of Educational Research and Training (SCERT)
Poojappura, Thiruvananthapuram - 695 012, Kerala
Website: www.scertkerala.gov.in
e-mail: scertkerala@asianetindia.com
Phone : 0471 - 2341883, Fax: 0471 - 2341869
First Edition: 2015
© Government of Kerala Department of Education

# மலரும் முல்லை மொட்டுகளே!

இந்நூலில்...
உங்களுக்கு விருப்பமான
கதைகள் உள்ளன;
பாடல்கள் உள்ளன.
தனித்தும்
உங்கள் நண்பர்களோடு
சேர்ந்தும் செயல்பட
ஏராளம் செயல்பாடுகள் உள்ளன.
வரைந்தும் வாசித்தும் எழுதியும் வளர
வாசற்கதவு
இதோ...
உங்களுக்காகத் திறக்கப்பட்டுள்ளது.
தேன் தேடும் பட்டாம்பூச்சியாய்ப்
பறந்து பறந்து அறிவுத்தேன் எடுக்க
இந்நூல் உங்களுக்காக
வடிவமைக்கப்பட்டுள்ளது.
தங்கள் கற்றல் சிறக்க வாழ்த்துகள்.

**முனைவர். எஸ். இரவீந்திரன் நாயர்,**
**இயக்குநர்,**
**மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்,**
**திருவனந்தபுரம்.**

# Textbook Development Committee

## Tamil (Part - 1)

### *Members*

**Anesha Banu. A. K,**
LPSA, GSLPS, Fort,
Thiruvananthapuram.

**Babu.S,**
PD Tr., GLPS,
Devikulam, Idukki.

**Beula Elezabeth.A,**
UPSA, GUPS,Malakkappara,
Trichur.

**Dominic Savio.J,**
HSA, SFXHS, Parisakkal,
Palakkad.

**Krishnamoorthy.M,**
PD Tr., GLPS, Kunnamkattupathy,
Palakkad.

**Muniyandi.K,**
LPSA, GHS, Meenachipuram,
Palakkad.

**Prakasam.P,**
LPSA, ALPS., Kallaar Munnar,
Idukki.

**Rajendren. G,**
UPSA, GHSS, Kozhippara,
Palakkad.

**Robert Xavier.M,**
Headmaster, ALPS, Attempathy,
Palakkad.

**Selvi.V,**
LPSA, GFLPS, Managud,
Thiruvananthapuram.

**Thankaraju.T,**
LPSA, G.H.S., Meenachipuram,
Palakkad.

### *Experts*

**Dr. Ratnasabapathy.P,**
Prof.(Rtd.), Chennai.

**Dr. Sethupandian.T,**
Prof., (Rtd.), M.K. University, Madurai.

**Dr. Veerappan.P,**
Prof., (Rtd.), NCERT, Mysore.

**Dr. Gomathynayagam.E,**
Guest. Lr, University of Madras, Chennai.

### *Artists*

**Nandhakumar.C,**
Chittur, Palakkad.

**Rakesh P Nair,**
Neyyar Dam, Thiruvananthapuram.

### *Academic Co-ordinator*

Dr.Sahaya Dhas.D, Research Officer, SCERT.

**State Council of Educational Research and Training(SCERT)**
Poojappura, Thiruvananthapuram - 695 012.


# உள்ளடக்கம்


1. எங்க ஊர் போலாகுமா? .............. 7 - 28

2. வீடு நல்ல வீடு .............................. 29 - 50

3. உன்னை விடமாட்டேன்! ..................... 51 – 72


4. உயிர் வாழ ........................................ 73 - 96


பெயர் :
வகுப்பு :
அப்பா பெயர் :
அம்மா பெயர் :
ஊர் :
அலைபேசி எண் :

# 1

# எங்க ஊர் போலாகுமா?






# கொட்டிக் கிடக்கும் பேரழகு

செங்கரும்பு வயல் எல்லாம் பூத்திருக்கும்
செவ்வெறும்பு தேனுண்ண ஊர்ந்துவரும்
காற்றினிலே நெற்பயிர்கள் தலையசைக்கும்
சேற்றினிலே தாமரைப்பூ மலர்ந்திருக்கும்

மாங்கனிகள் மரத்தினிலே காய்த்துத் தொங்கும்
தாமரைப்பூ குளத்தினிலே தலையாட்டிச் சிரிக்கும்
கருங்குயிலோ இன்குரலில் பாட்டிசைக்கும்
கோலமயில் தோகைவிரித்து நடனமிடும்



மலைகளுமே தலை நிமிர்ந்து நமைப்பார்க்கும்
கருமேகம் மலைகளிலே குடியிருக்கும்
அருவியது பால்போலப் பாய்ந்து வரும்
பக்கம் சென்று தொட்டுப் பார்க்க நமைத்தூண்டும்

கோடுபோட்ட சட்டைபோட்டு அணில்கள் நடக்கும்
குட்டிக் குட்டி ராக்கெட்டாய் குருவிகளும் பறக்கும்
கொட்டிக் கிடக்கும் பேரழகைக் காண உன்னை அழைக்கும்
கோடிப்பணம் கொடுத்தாலும் வேறு எங்கே கிடைக்கும்?



## சொல்லுங்கள்

- உங்கள் ஊரின் பெயர் என்ன?
- குன்று, அருவி, குளம், வயல், ஆறு இவற்றுள் உங்கள் ஊரில் இருப்பவை எவை?
- உங்கள் ஊருக்கு அழகு தருபவை எவை?
- அருவியில் குளித்தது உண்டா?

## ஒத்த ஓசையுடைய சொற்கள்

- பாடலில் வந்துள்ள ஒத்த ஓசையுடைய சொற்களைக் கண்டுபிடியுங்கள்; எழுதுங்கள்.

| • காற்றினிலே | • சேற்றினிலே |
|---|---|
| • | • |
| • | • |
| • | • |
| • | • |

## சொற்கள் எழுதுங்கள்

- கீழுள்ள சொற்களை வாசியுங்கள். அவை போன்ற ஒத்த ஓசையுடைய சொற்களைக் கண்டுபிடியுங்கள்; எழுதுங்கள்.

வண்டு :

குன்று :

வயல் :

## வாக்கியத்தில் பயன்படுத்துங்கள்

| | |
|---|---|
| வளைந்து நெளிந்து | |
| பரந்து விரிந்து | |
| குனிந்து நிமிர்ந்து | |
| மூடித் திறந்து | |
| ஓடி நடந்து | |
| முட்டி மோதி | |

## நான் யார்?

காலில்லாமல் செல்கின்றேன்
கடலை நோக்கிப் போகின்றேன்
வளைந்து நெளிந்து செல்கின்றேன்
நீரைக் கொண்டு சேர்க்கின்றேன். - நான் யார்?

மேடு பள்ளம் இல்லை
குண்டும் குழியும் இல்லை
பயிர்கள் விளையும் நிலம் நான்
உயிரைக் காக்கும் நிலம் நான். - நான் யார்?

தரையிலிருந்து உயர்ந்திருப்பேன்
பச்சைப் பட்டை அணிந்திருப்பேன். - நான் யார்?

கால்நடைகளுக்கு உணவளிப்பேன்
காட்சிக்கு அழகாய் நானிருப்பேன். - நான் யார்?

## வேறுபாடு

குளத்திற்கும் ஆற்றுக்கும் வேறுபாடு என்னென்ன? சொல்லுங்கள்.

| ஆறு | குளம் |
|---|---|
| தண்ணீர் பாய்ந்தோடும் | தண்ணீர் தேங்கி நிற்கும் |
| | |
| | |
| | |

## உண்டா இல்லையா? ✓ அடையாளமிடுங்கள்


எனது ஊரின் பெயர் : ..........................................................................

| | | | |
|---|---|---|---|
| குன்று | : | உண்டு ☐ | இல்லை ☐ |
| ஆறு | : | உண்டு ☐ | இல்லை ☐ |
| குளம் | : | உண்டு ☐ | இல்லை ☐ |
| வயல் | : | உண்டு ☐ | இல்லை ☐ |
| கடற்கரை | : | உண்டு ☐ | இல்லை ☐ |
| காடு | : | உண்டு ☐ | இல்லை ☐ |
| மலை | : | உண்டு ☐ | இல்லை ☐ |

உங்கள் ஊரில் என்னென்ன உயிரினங்கள் வாழ்கின்றன?

அவற்றால் என்னென்ன பயன்கள் கிடைக்கின்றன?

## வரையுங்கள் - வண்ணம் தீட்டுங்கள்



## சொல் விளையாட்டு

புதிய ஊர், புதிய பள்ளிக்கூடம். முதல் நாள்.
அவள் பள்ளிக்கூடத்திற்குச் சென்றாள்.

“உன் பெயர் என்ன?” அருகில் அமர்ந்திருந்த மாணவன் கேட்டான்.

அவள் அவனது குறிப்பேட்டை வாங்கினாள்.

விரல்

ஜன்னல்

யார்

என்று எழுதினாள். “இந்த மூன்று சொற்களுக்குள் என் பெயர் இருக்கிறது. நீயே கண்டுபிடி” என்றாள்.

அம்மாணவன் சொற்களை வாசித்தான். பெயரைக் கண்டுபிடித்தான்.

# ஊருக்குள்ளே உற்சாகம்



எல்லோரும் ஊரைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டார்கள்.

தெருக்கோடியில் வயல்கள் தெரிந்தன.

வயல்களுக்கு நடுவே குளம்.

பீட்டர் குளத்தைப் பார்த்து ஓடினான்.

எல்லோரும் அவன் பின்னே ஓடினார்கள்.

“ஆகா! எவ்வளவு பெரிய நீச்சல் குளம்!” கதீஜா வியந்தாள்.

தாமரை தலையாட்டியது. தன் மகிழ்ச்சியைத் தெரிவித்தது.

“எனக்குத் தாமரைப் பூ மாலை வேண்டும்” தமிழ்ச்செல்வி கேட்டாள்.

“இதோ ஒரு நொடியில்...” சூர்யா குளத்தில் குதித்தான்.

தாமரையை நோக்கி நீந்தினான்.

அவன் கையில் தாமரைப் பூ.

தண்டுடன் கூடிய தாமரைப் பூ.

தண்டை ஒடித்தும் ஒடிக்காமலும் மாலை செய்தான்.

தமிழ்ச்செல்வியிடம் கொடுத்தான்.

அவள் கழுத்தில் அணிந்து கொண்டாள்.

“ஆகா, அழகாக இருக்கிறது. அசையாமல் இரு”

கதீஜா புகைப்படம் எடுத்தாள்.

தமிழ்ச்செல்வியின் கழுத்தில் தாமரைப்பூ மாலை.

“செல்வி, உனக்குக் கம்மல், மூக்குத்தி எல்லாம் வேண்டாமா?”

கோகிலா கேட்டாள்.



அருகிலிருந்த செடியிலிருந்து இரண்டு பூக்களைப் பறித்தாள்.

செல்வியின் காதுகளில் ஒட்டி விட்டாள்.

அவை அப்படியே ஒட்டிக்கொண்டன.

அவை லோலாக்கு போல் இருந்தன.

மேலும் ஒரு பூவைப் பறித்தாள்.

செல்வியின் மூக்கில் ஒட்ட வைத்தாள்.

மூக்குத்திப் பூ ஜொலித்தது.

“தமிழ்ச்செல்வி, இந்த ஊரின் அழகி நீதான்” என்றான் பீட்டர்.

எல்லோரும் சிரித்தார்கள்.

கதீஜா மறக்காமல் செல்வியைப் புகைப்படம் எடுத்தாள்.



எல்லோரும் புறப்பட்டார்கள்

எல்லோருக்கும் வீட்டில் அறுசுவை உணவு காத்திருந்தது.

## சொல்லுங்கள்

- நீங்கள் தாமரைப்பூ மாலையை அணிந்தது உண்டா?
- ஒட்டுப்பூவை ஒட்டிப் பார்த்ததுண்டா?
- ஊரில் வேறு என்னென்ன காட்சிகளைப் பார்த்து ரசித்திருக்கிறீர்கள்?
- உங்கள் ஊரில் குளம் உண்டா? குளத்தில் குளித்தது உண்டா?

## புகைப்படம்

- உங்கள் புகைப்படத்தை நண்பர்களுக்குக் காட்டுங்கள். அதைப் பற்றி அவர்களிடம் பேசுங்கள்.

## அழகு சேர்க்கும் அணிகலன்கள்

- மூக்குத்தி, லோலாக்கு போல வேறு எத்தனை அணிகலன்களின் பெயர்கள் உங்களுக்குத் தெரியும்? எழுதுங்கள்.

மூக்குத்தி

லோலாக்கு

..................................................

..................................................

..................................................

..................................................



## என்ன பேசுவார்கள்?

வீட்டுக்குச் செல்லும் வழியில் ஒரு காட்சி.

சேற்று வயலில் ஆண்களும் பெண்களும் நாற்று நடுகிறார்கள்.

பட்டணத்திலிருந்து வந்தவர்கள் அக்காட்சியைப் பார்த்தனர்.

கோகிலா, சூர்யா ஆகியோரிடம் அதைப் பற்றிப் பேசினார்கள்.

- அவர்கள் என்னென்ன பேசியிருப்பார்கள்?

## என்னென்ன செய்வார்கள்?

ஊருக்கு வந்த குழந்தைகள் என்னென்ன செய்வார்கள்?

குளத்தில் நீந்திக் குளிப்பார்கள்.

ஆற்றில் இறங்குவார்கள்.

தூண்டில் போட்டு மீன் பிடிப்பார்கள்.

கன்றுக்குட்டியைக் கட்டிப் பிடிப்பார்கள்.

கரும்பைக் கடித்துத் தின்பார்கள்.

......................................................................................

......................................................................................

......................................................................................

......................................................................................

......................................................................................

## ஊர்ப்பெயர்கள்

தெரிந்த ஊர்ப்பெயர்களை எழுதுங்கள்.

| ஊர் | ஆறு | பாறை | குளம் |
|---|---|---|---|
| கோயம்புத்தூர் | மூணாறு | வட்டப்பாறை | எர்ணாகுளம் |
| புத்தூர் | பாலாறு | சோத்துப்பாறை | தேவிகுளம் |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

## வாக்கியத்தில் பயன்படுத்துங்கள்

எடுத்துக்காட்டுகளைப் போல் வாக்கியங்கள் உருவாக்குங்கள்.

அணிந்தாள் : தமிழ்ச்செல்வி மாலை அணிந்தாள்.

அணிந்தால் : மாலை அணிந்தால் அழகாக இருக்கும்.

எடுத்தாள் : கதீஜா புகைப்படம் எடுத்தாள்.

எடுத்தால் : புகைப்படம் எடுத்தால் பார்த்து ரசிக்கலாம்.

வந்தாள் : ..............................................................................................

வந்தால் : ..............................................................................................

கேட்டாள் : ..............................................................................................

கேட்டால் : ..............................................................................................


## சொற்கள் உருவாக்குங்கள்


ஒலித்துணைக் குறியீடுகள் சேர்த்துச் சொற்கள் உருவாக்குங்கள்.

**க, ட :**

கடி, கடை, காடு, காடை, குடி, கூடி, குடை, கூடை, கெடு, கேடு, கொடு, கோடு, கொடி, கோடி...

**ப, ட :**





# என்ன ஆட்டம் ஆடலாம்?

பந்து விளையாடவா?
பம்பரத்தைச் சுழற்றவா?
பல்லாங்குழி ஆடவா?
கண்ணாமூச்சி ஆடவா?

தொட்டு விளையாடவா?
கிட்டிப்புள் ஆடவா?
கூட்டாஞ்சோறு வைக்கவா?
பட்டம் விட்டுப் பார்க்கவா?









பலூன் ஊதிப் பார்க்கவா?

பாட்டி போல நடிக்கவா?

கோலிக்குண்டு ஆடவா?

கோலம் போட்டுப் பார்க்கவா?

என்ன ஆட்டம் ஆடலாம்?

எனக்கு எடுத்துச் சொல்லுங்கள்







## சொல்லுங்கள்

- பாடலில் எத்தனை விளையாட்டுகளின் பெயர்கள் வந்துள்ளன?
- பாடலில் வந்துள்ள எத்தனை விளையாட்டுகளை நீங்கள் விளையாடியுள்ளீர்கள்?
- உங்களுக்கு மிகவும் பிடித்த விளையாட்டு எது?
- பொருள்களைப் பயன்படுத்தி விளையாடும் எத்தனை விளையாட்டுகள் பாடலில் வந்துள்ளன?

## வேறு விளையாட்டுகள்

பாடலில் வராத சில விளையாட்டுகளின் பெயர்களை எழுதுங்கள்.

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

## பாடுங்கள்

- பாடலை மெட்டமைத்துப் பாடிப்பாருங்கள். எத்தனை மெட்டுகளில் பாட முடியும்?

## பாராமல் பாடுங்கள்

- பாடலைப் பாராமல் பாட முடியுமா? முயன்று பாருங்கள்.

## விளையாட்டு விடுகதைகள்

கீழ்வரும் குறிப்புகளை வாசியுங்கள். விளையாட்டுகளைக் கண்டுபிடியுங்கள்.

1. பலகையிலே குழிகள் இருக்கும்.
குழிகளிலே விதைகள் இருக்கும்.

2. கட்டு கட்டு
கண்ணைக் கட்டு
கையை நீட்டி
தொடவரும்போது
செல்லு செல்லு
விலகிச் செல்லு.

3. கண்ணை மூடிக் கொள்ளு
ஒன்று இரண்டு சொல்லு
ஒளிந்து கொண்ட நண்பரை
பார்த்துப் பெயரைச் சொல்லு.

4. தரையில் கட்டம் போடு
சில்லைத் தூக்கிப் போடு
நொண்டி நொண்டிச் சென்று
சில்லை வெளியே தள்ளு.

5. கல்லைத் தூக்கிப் போடு
கையால் தரையைத் தட்டு
கீழே விழும் கல்லை
கையால் பிடித்துக் கொள்ளு.





# எங்க அப்பா-அம்மா

என் அம்மா மிகவும் பலசாலி
அவர் கையைக்காட்டினால் போதும்
வாகனங்கள் அப்படியே நின்று விடும்.
என் அம்மா யார்?





என் அம்மா சேற்றில் கால் வைக்காவிட்டால்
ஊரார் சோற்றில் கை வைக்க முடியாது.
என் அம்மா யார்?

என் அப்பா இல்லாவிட்டால்
ஊரார் மழையில் நனைவார்கள்;
வெயிலில் காய்வார்கள்;
குளிரில் நடுங்குவார்கள்.
என் அப்பா யார்?

என் அம்மா வெட்டுவார்.
சேர்த்துக் கட்டுவார்.
மானத்தைக் காக்க உதவுவார்.
என் அம்மா யார்?








என் அப்பா ஒரு மருத்துவர்
ஆனால் மனிதர்களுக்கல்ல
வாகனங்களுக்கு.
என் அப்பா யார்?

என் அப்பா வேலை செய்யாவிட்டால்
ஊரே இருளில் மூழ்கி விடும்.
என் அப்பா யார்?

என் அப்பா வேலை செய்யாவிட்டால்
ஊரார் எங்குமே போக முடியாது.
என் அப்பா யார்?

பிறந்த நாளா, திருமணநாளா
விழாவா பண்டிகையா
எல்லோரும் என் அம்மாவை
நாடி வருவார்கள்.
என் அம்மா யார்?





## எழுதுங்கள்

- பாடப்பகுதியிலுள்ள விடுகதைகளுக்கு விடை எழுதுங்கள்.

1. 
2. 
3. 
4. 
5. 
6. 
7. 
8. 

## சொல்லுங்கள்

- உங்கள் பெற்றோர் என்ன வேலை செய்கிறார்கள்?
- உங்கள் நண்பர்களின் பெற்றோர்கள் செய்யும் வேலைகள் என்னென்ன?
- உங்களுக்குப் பிடித்த வேலை என்ன? ஏன்?

## நான் யார்?

- நான் தெருவுக்குள் நுழைந்தால் ஊரே கமகமக்கும்! ...............................
- செய்திகளை அள்ளித் தருபவன் நான்! ..................................................
- கூவிக் கூவி அழைத்துக் கூடை நிறைய பொருள் தருவேன்! ..................
- நான் வந்தால் என் பின்னால் குழந்தைகள் வருவார்கள்! ...........................

இவைபோல் வேறு வாக்கியங்கள் சொல்ல முடியுமா?


## நீங்களும் கண்டுபிடியுங்கள்.

- அமுதா, கவிதா, சபிதா, லதா, குமுதா ஆகியோர் தங்கள் பெயர்களை எப்படி சொற்களின் மூலம் குறிப்பிடுவார்கள்?.

## சொல்லுங்கள்

- கீழ்வரும் படங்களைப் பாருங்கள். இவை உங்கள் ஊரில் உண்டா? அவை நமக்குச் செய்யும் சேவைகள் என்னென்ன?





______________________________

______________________________

______________________________







______________________________

______________________________

______________________________

## பாடி மகிழ



பாலக்காடு போகலாம்.
பால்கோவா வாங்கலாம்.
கோழிப்பாறை போகலாம்.
கோழி ரெண்டு வாங்கலாம்.
வண்டிப்பெரியார் போகலாம்.
வண்டி ஒன்று வாங்கலாம்.
ஏலப்பாறை போகலாம்.
ஏலம் கொஞ்சம் வாங்கலாம்.

.....................................................

.....................................................

.....................................................

.....................................................

## சொல் விளையாட்டு

ஊர்ப் பெயரிலுள்ள எழுத்துகளைப் பயன்படுத்திப் புதுச்சொற்கள் உருவாக்குங்கள்.

| | |
|---|---|
| உடுமலை | : மலை, உலை, மடு |
| திருவனந்தபுரம் | : புரம், வனம், தரம், வரம், தினம் |
| திருநெல்வேலி | : |
| வண்டிப்பெரியார் | : |
| குண்டுமலை | : |
| பள்ளிவாசல் | : |

# 2

# வீடு நல்ல வீடு



# பானை வீடு



சிலந்தி ஓடி வந்தது.

அங்கும் இங்கும் பார்த்தது.

“அதோ.... ஓர் உடைந்த பானை!”

“உலை வைக்கும் பானையில்

வலை கட்டலாம்”

சிலந்தி பானைக்குள் வலை கட்டியது.

“டக்.. டக்... டக்...”

“யாரது?” சிலந்தி கேட்டது.

“நான்தான் குளவி”

“என்ன வேண்டும்?”



**வீடு பானை வீடு**

**மழை நனையா வீடு**

**நானும் கூடு கட்ட**

**நாடி இங்கு வந்தேன்.**

சிலந்தி குளவியைக் கூடு கட்ட

அனுமதித்தது.



"டக்... டக்... டக்..."

"யாரது?"

"நான் தான் குருவி"

"என்ன வேண்டும்?"



**வீடு பானை வீடு**
**வெயில் படா வீடு**

.....................................................

.....................................................

சிலந்தியும் குளவியும்
குருவியைக் கூடு கட்ட அனுமதித்தன.

"டக்... டக்... டக்..."
"யாரது?" குருவி கேட்டது.


"நான் தான் தேனீ"
"என்ன வேண்டும்?"

**வீடு பானை வீடு**
**காற்று வீசா வீடு**

.....................................................

.....................................................

தேனீயையும் கூடு கட்ட அனுமதித்தன.



பானை வீட்டின் அருகே வந்தது பூனை.

**வீடு பானை வீடு**
**மழை நனையா வீடு**
**வெயில் படா வீடு**
**காற்று வீசா வீடு**
**நான் உறங்கும் வீடு**

பூனை வீட்டுக்குள்ளே பார்த்தது.

“யாரது? என் வீட்டுக்குள்ளே... வெளியே வாருங்கள்” பூனை அதட்டியது.


“உள்ளே வராதே! இது எங்கள் வீடு” நான்கும் உரக்கக் கத்தின.

பூனை கேட்கவில்லை. தேனீ பூனையைக் கொட்டியது.

பூனைக்குக் கோபம் வந்தது.

“என்னையா கொட்டினாய்? உங்களை என்ன செய்கிறேன் பாருங்கள்” என்றது.

பூனை பானையை எட்டி உதைத்தது. பானை வீடு உருண்டது.



## சொல்லுங்கள்

- உருண்டு உருண்டு பானை எங்கே செல்லும்?
- பானைக்குள் இருப்பவர்கள் என்ன செய்வார்கள்?
- பானை வீடு யாருக்குச் சொந்தமானது?
- பூனை செய்தது சரியா?
- தேனீ பூனையைக் கொட்டியது சரியா?
- குளவி பானை வீட்டைத் தேடி வரக் காரணம் என்ன?
- உடைந்த பானைக்குள் வேறு யாரெல்லாம் வாழலாம்?

## கவனியுங்கள்



வீடு நம்மை வெயில்படாமல் காக்கும்.

மழையிலிருந்தும் காக்கும்.


இந்தக் குருவிக்கூட்டைப் பாருங்கள்.

- மழையிலிருந்தும் வெயிலிலிருந்தும் காக்கக் குருவி என்ன செய்துள்ளது?

## சொல்லுங்கள்

- வண்டு பானை வீட்டைத் தேடி வருகிறது.

அது எப்படித் தங்க அனுமதி கேட்டிருக்கும்?



..........................................................................

..........................................................................

..........................................................................

..........................................................................



JT 395-3/Tamil-2 (Vol-1)

## முதலும் கடைசியும்

கீழ்வரும் வாக்கியங்களை வாசியுங்கள்.
இவை போன்று வேறு வாக்கியங்கள் சொல்லுங்கள்.

- உலை வைக்கும் பானையில் வலை
- பானை வீட்டில் பூனை
- குன்றில் மேயுது கன்று
- அருவியில் குளிக்குது குருவி
- ..............................................................................
- ..............................................................................



## கண்டுபிடியுங்கள்

சிலந்தி வலையில் கொசு, ஈ ஆகியவை மாட்டிக்கொள்ளும்.
ஆனால் சிலந்தி மட்டும் தன் வலையில் மாட்டிக்கொள்ளாமல்
இருக்கிறதே! எப்படி?

சிலந்தி வலை கட்டுவதைக் கவனியுங்கள்.

பதிலைக் கண்டுபிடியுங்கள்.



## வளரும் சொல்

வீடு

பானை வீடு

உடைந்த பானை வீடு

உடைந்த சிவப்புப் பானை வீடு

மழை நனையா உடைந்த சிவப்புப் பானை வீடு

குருவி

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

## யார் யார் வசிப்பார்கள்?

பானை வீட்டில் சிலந்தி, குளவி, தேனீ, குருவி ஆகியவை வசித்தன.

கீழ்க்காணும் வீடுகளில் எந்தெந்த உயிரினங்கள் வசிக்கின்றன?

| மரவீட்டில் | மண் வீட்டில் | பொந்து வீட்டில் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

# புதிய வீட்டைத் தேடி...



பானை வீடு உருண்டது.

"ஐயோ!" குருவி அலறியது.

பானை பள்ளத்தை நோக்கி உருண்டது.

"தலை சுற்றுகிறதே!" குளவி அழுதது.

சிலந்தி கட்டிய வீட்டில் குருவி விழுந்தது.

"என் வலை வீடு அறுந்ததே! நான் எவ்வளவு கவனமாகக் கட்டினேன்" சிலந்தி புலம்பியது.

"மரங்களெல்லாம் ஓடுகிறதே!" தேனீ கூச்சலிட்டது.

பானை வீடு உருண்டது.

உருண்டு உருண்டு ஓடியது.

மரத்தில் மோதியது.




"படார்..." பானை வீடு உடைந்தது.

குருவி பறந்தது.

மரத்தில் அமர்ந்தது.

சுற்றிலும் பார்த்தது.

பலவகையான வீடுகள்!



தன்னுடன் தங்கிய நண்பர்களைத் தேடியது.

குளவியும் சிலந்தியும்
தட்டுத் தடுமாறி வெளியே வந்தன.

குருவி அவற்றின் அருகே வந்தது.

"யாருக்கும் ஒரு பிரச்சினையும்
இல்லையே?"
குருவி விசாரித்தது.









"அப்பாடா.. ஒரு விதமாகத் தப்பித்தோம்"
தேனீ கூறியது.

"பானை வீடு உடைந்து விட்டது.
இனி எங்குப் போய்த் தங்குவது?"
சிலந்தி கவலைப்பட்டது.


"கவலை வேண்டாம். ஒரு வழி உண்டு.
அதோ பாருங்கள்.
குடிசை வீடு, மாடி வீடு, ஓட்டு வீடு...
எத்தனை எத்தனை வீடுகள்!"

"உங்களுக்கு எந்த வீடு வசதியோ அங்குச்
சென்று தங்கிக்கொள்ளுங்கள்.
பத்து நாட்கள் கழிந்து மீண்டும் சந்திப்போம்"
குருவி சொன்னது.

குருவி "பட பட" வெனச் சிறகடித்துப்
பறந்தது. ஓட்டு வீட்டில் கூடு கட்டியது.

சிலந்தி குடு குடுவென ஓடியது.
குடிசை வீட்டில் வலை பின்னியது.

குளவியும் தேனீயும் தங்களுக்குப்
பொருத்தமான வீட்டை நோக்கிப் பறந்தன.





## சொல்லுங்கள்

- குளவியும் தேனீயும் எந்தெந்த வீடுகளில் கூடு கட்டியிருக்கும்?
- பானை உருளும்போது என்னென்ன நிகழ்ச்சிகள் நடந்தன?
- வேறு என்னென்ன நடந்திருக்கும்?
- உங்களுக்கு எப்போதாவது தலைசுற்றல் ஏற்பட்டுள்ளதா? எப்போது?

## அதிகம் எது?

- உங்கள் தெருவில் உள்ள வீடுகளைக் கவனியுங்கள். குடிசை வீடுகள் அதிகமா? ஓட்டு வீடுகள் அதிகமா? மாடி வீடுகள் அதிகமா?

## வேறுபாடு என்னென்ன?

- குடிசை வீட்டுக்கும் மாடி வீட்டுக்கும் என்னென்ன வேறுபாடுகள் உள்ளன? சொல்லுங்கள்.

| குடிசை வீடு | மாடி வீடு |
|---|---|
| ஓலை வேய்ந்தது | கான்கிரீட் கூரை |
| | |
| | |

## வாக்கியத்தில் பயன்படுத்துங்கள்

"படபட" எனக் குருவி சிறகடித்தது.

"சலசல" என ..........................................................

"பளபள" என ..........................................................

"கலகல" என ..........................................................

"சடசட" என ..........................................................

## கண்டுபிடியுங்கள்

கீழ்வரும் சொற்களுக்கான எதிர்ச்சொற்களைப் பாடப்பகுதியிலிருந்து கண்டுபிடியுங்கள்; எழுதுங்கள்.

- சிரித்தது : ..........................................
- எழுந்தது : ..........................................
- மேடு : ..........................................
- மாட்டிக்கொண்டோம் : ..........................................
- பிரிந்தார்கள் : ..........................................
- மகிழ்ச்சி அடைந்தது : ..........................................

## தொடர்ந்து சொல்ல முடியுமா?

என்ன வேண்டும்?

வீடு வேண்டும்.

என்ன வீடு?

குடிசை வீடு.

என்ன குடிசை?

ஓலைக் குடிசை.



______________________

______________________

______________________

______________________



## வண்ணம் தீட்டுங்கள்



## பட்டியலிடுங்கள்

| வீட்டிலுள்ள வசதிகள் | ஆசைப்படும் வசதிகள் |
|---|---|
| • மின்சாரம் உண்டு | • |
| • | • |
| • | • |
| • | • |
| • | • |
| | • |

# வீடு நல்ல வீடு



வீடு நல்ல வீடு - பனை
ஓலை வேய்ந்த வீடு!
கம்பு குச்சி எல்லாம்- சேர்த்துக்
கட்டி வைத்த வீடு!

அறைகள் இல்லா வீடு- வழுக்கும்
தரைகள் இல்லா வீடு!
வசதி இல்லா வீடு- வறிய
மக்கள் வாழும் வீடு!



ஒளிக் காசைச் சிதறி- கதிரவன்
கோலம் போடும் வீடு!
நிலவும் போட்டிப் போட்டு- கோலப்
புள்ளி வைக்கும் வீடு!

வீடு நல்ல வீடு- நல்ல
மனிதர் வாழும் வீடு!
பார்த்துப் பாடம் பயில- இங்கு
யாரு உண்டு கூறு!



## சொல்லுங்கள்


- யார் தங்கியிருக்கும் வீடு உங்களுக்கு மிகவும் பிடித்தது?
- கொசு தன் வீட்டைப் பற்றிச் சொன்னால் எப்படிச் சொல்லியிருக்கும்?

## எனது வீடு

- என் பெயர் : ..............................................................................................
- பெற்றோர் → ..............................................................................................
  → ..............................................................................................
- உறுப்பினர்கள் எண்ணிக்கை : ......................................................
- என் வீடு : ☐ ஓலை வீடு ☐ ஓட்டு வீடு ☐ மாடி வீடு
- அறைகளின் எண்ணிக்கை : ....................................
- குடிநீர் வசதி : உண்டு ☐ இல்லை ☐
- மின் வசதி : உண்டு ☐ இல்லை ☐
- குளியலறை : உண்டு ☐ இல்லை ☐
- சமையலறை : உண்டு ☐ இல்லை ☐
- ..............................................................................................
- ..............................................................................................
- ..............................................................................................

## தேவை என்ன?

கீழே கொடுக்கப்பட்டுள்ள பொருள்களுள் மாடி வீடு கட்டத் தேவையான பொருள்களை வட்டமிடுங்கள்; எழுதுங்கள்.



| | |
|---|---|
| | |
| | |
| | |

## எழுதுங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஏழை மக்கள் | - | சந்திரன் | - | சூரியன் | - | படிக்க |
| வறிய மக்கள் | - | | | | | |
| பயில | - | | | | | |
| கதிரவன் | - | | | | | |
| நிலவு | - | | | | | |

- பொருத்தமான சொற்களை எடுத்து எழுதுங்கள்?
- அச்சொற்களை பாடலில் பொருத்தமான இடத்தில் சேர்த்துப் பாட முடியுமா?

# தொங்கும் தோட்டம்

"அண்ணா... அண்ணா..." மணிமொழி தன் அண்ணன் அமுதனை அழைத்தாள்.

"நான் இங்கிருக்கிறேன்" மரத்தடியிலிருந்து அமுதன் பதிலளித்தான். மணிமொழி மரத்தடிக்கு ஓடினாள். அவனருகில் பத்துப் பன்னிரண்டு பிளாஸ்டிக் குப்பிகள்.

"என்ன அண்ணா? என்ன செய்யப் போகிறாய்?"



"நான் ஒரு முக்கியமான வேலையில் ஈடுபட்டுள்ளேன்" அமுதன் கூறினான்.

"முக்கியமான வேலையா? அது என்ன வேலை?" மணிமொழி ஆர்வத்தோடு கேட்டாள்.

"நான் ஒரு தொங்கும் தோட்டம் அமைக்கப் போகிறேன்."



"தொங்கும் தோட்டமா? அது எப்படி இருக்கும்?

நான் இதுவரை கேள்விப்பட்டது இல்லையே?"

மணிமொழி அமுதனின் முகத்தைப் பார்த்தாள்.

அண்ணன் என்ன செய்கிறான் என்பதைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அமுதன் பிளாஸ்டிக் குப்பிகளை ஒவ்வொன்றாக எடுத்தான். அதன் மேல்பாகத்தை வெட்டினான்.

குப்பிகளின் அடிப்பாக மூலையில் ஒரு துளை இட்டான்.



மண், மணல், சாம்பல், சாணி உரம் சேர்ந்த கலவையை எடுத்தான்.

ஒவ்வொரு பிளாஸ்டிக் குப்பியிலும் நிரப்பினான். பிளாஸ்டிக் குப்பிகளில் விதை ஊன்றினான். மொட்டை மாடிக்கு எடுத்துச் சென்றான்.

மணிமொழியும் அமுதனின் பின்னால் சென்றாள்.

அமுதன் மொட்டை மாடியில் குறுக்கும் நெடுக்குமாக கயிறு இழுத்துக் கட்டினான்.

விதை ஊன்றிய பிளாஸ்டிக் குப்பிகளைக் கயிற்றில் தொங்க விட்டான்.

ஒவ்வொரு குப்பியிலும் சிறிது தண்ணீர் விட்டான்.

"அண்ணா... தொங்கும் தோட்டம் எங்கே?"

மணிமொழி கேட்டாள்.

"அவசரப் படாதே மணிமொழி. சிறிது நாள் காத்திரு; இந்த மொட்டைமாடி தொங்கும் தோட்டமாக மாறப்போகிறது" அமுதன் கூறினான்.

அந்த நல்ல நாளுக்காக இருவரும் காத்திருக்கத் தொடங்கினார்கள்.



## சொல்லுங்கள்

- தொங்கும் தோட்டம் உங்களுக்குப் பிடித்துள்ளதா?
- அமுதன் என்னென்ன விதைகளை ஊன்றியிருப்பான்?
- பிளாஸ்டிக் குப்பிகளின் அடிப்பகுதியில் துளை இட்டது ஏன்?
- பிளாஸ்டிக் குப்பியில் என்னென்ன பொருள்களை நிரப்பினான்?
- வீணான பிளாஸ்டிக் குப்பிகளை வேறு எதற்கெல்லாம் பயன்படுத்தலாம்?
- உங்கள் வீட்டில் தொங்கும் தோட்டம் அமைப்பீர்களா? ஏன்?

## வரிசைப்படுத்துங்கள்

- தொங்கும் தோட்டம் அமைக்க அமுதன் என்னென்ன செய்தான்? பாடத்தை வாசியுங்கள்; வரிசைப்படுத்துங்கள்; எண் எழுதுங்கள்.

| | |
|---|---|
| தண்ணீர் ஊற்றினான். | |
| விதை ஊன்றினான். | |
| பிளாஸ்டிக் குப்பிகளை எடுத்தான். | 1 |
| பிளாஸ்டிக் குப்பிகளைத் தொங்கவிட்டான். | |
| மண், மணல், உரம் சேர்ந்த கலவையை நிரப்பினான். | |
| குப்பிகளின் மேற்பகுதியை வெட்டி மாற்றினான். | |
| குறுக்கும் நெடுக்கமாகக் கயிறுகளைக் கட்டினான். | |
| பிளாஸ்டிக் குப்பிகளில் கயிறு கட்டினான். | |

## முதலில் முளைப்பது எது?

- செயல்திட்டம்

  - கடுகு, மல்லி, நெல், பாசிப்பயறு, உளுந்து, பட்டாணி... இவ்விதைகளுள் முதலில் முளைப்பது எது?
  - ஒன்றைத் தேர்ந்தெடுங்கள். குறிப்பேட்டில் குறித்து வையுங்கள்.
  - ஓர் இடத்தைத் தேர்ந்தெடுங்கள். மண்ணைப் பண்படுத்துங்கள்.
  - ஒரே நேரத்தில் அனைத்து விதைகளையும் ஊன்றுங்கள்.
  - விதைகளின் பெயர்களை அட்டையில் எழுதுங்கள். கம்பில் அட்டையைப் பொருத்துங்கள். ஊன்றியதன் அருகில் நட்டுவையுங்கள்.
  - எல்லா இடங்களிலும் ஒரேபோல் தண்ணீர் விடுங்கள்.
  - கோழி, பறவைகள் கொத்தாமல் பார்த்துக் கொள்ளுங்கள்
  - நாளும் சென்று பாருங்கள்.

    - எந்த விதை முதலில் முளைத்தது?

## தொடர் உருவாக்குங்கள்

- தொங்கும் தோட்டம்
- மூங்கில் காடு
- வீட்டுத் தோட்டம்

  - இவைபோன்று மேலும் சில தொடர்கள் உருவாக்குங்கள்.

## சொல்லுங்கள்

- நாட்கள் வாரங்களாயின. வாரங்கள் மாதங்களாயின. சில மாதங்கள் கழிந்தால் தொங்கும் தோட்டம் எப்படி இருக்கும்? சொல்லுங்கள்.

3

# உன்னை விடமாட்டேன்!



# உன்னை விடமாட்டேன்!



ஆனந்தன் கண் விழிக்கவும் "ட்ரிங் ட்ரிங்" என்று அலாரம் அடிக்கவும் சரியாக இருந்தது.

அந்த அறையில் விளக்கொளி பரவியது.

அறை துடைத்து வைத்த கண்ணாடி போல் பளபள வென இருந்தது.

கொசுவலை மூடிய ஒரு கட்டில்...

அதிலிருந்து ஒரு சிறுவன் இறங்கினான்.

அவனுக்கு ஏழோ எட்டோ வயதிருக்கும்.

மும்முறை கைகளை உயர்த்தினான்.

இருமுறை குனிந்து பாதங்களைத் தொட்டான்.

கைகளை அகல விரித்துச் சோம்பல் முறித்தான்.

தரையைப் பார்த்தான்.

தூசி துரும்பு ஒன்றும் தெரியவில்லை.

ஆயினும் தரையைப் பெருக்கினான்.


விலகி நின்று பார்த்தான்.

"நன்று" என்று அவனே கூறிக்கொண்டான்.

"ஈக்கள் என்னருகே வர அஞ்சும்"

அவன் பெருமையோடு சிரித்தான்.





பல் விளக்கினான்.

"ஈஈஈ...."

கண்ணாடியில் பற்களைப் பார்த்தான்.

முகத்தை அப்படியும் இப்படியும் திருப்பினான்.

கடைவாய்ப் பற்களும் சுத்தமாக இருந்தன.

கட்டிலின் அருகில் சென்றான். கொசுவலையைச் சுருட்டிக் கட்டினான்.

"கொசு என்னை அண்டாது".

அவன் தனக்குத்தானே சிரித்துக்கொண்டான்.

போர்வையை உதறினான். மடித்து வைத்தான்.

படுக்கை விரிப்பை நீவிச் சரிசெய்தான். விலகி நின்று பார்த்தான்.

"நன்று" என்று அவனே கூறிக்கொண்டான்.

பளிச்சென்று இருக்கும் வட்ட முகம். ஒழுங்காக வாரப்பட்ட சுருட்டை முடி.

தூய்மையானஆடை.

ஆம். ஆனந்தன் அப்படித்தான்.



ஒவ்வொன்றையும் பார்த்துப் பார்த்துச் செய்வான்.



ஆனால்...

இப்படிப்பட்ட ஆனந்தனுக்கும் சில எதிரிகள் இருந்தனர்.

ஒருவர் பாடிப் பாடிப் பறப்பார்.

பறந்து வந்து கடிப்பார்.

அடுத்தவரும் பறந்து வருவார்.

அழுக்கின் மேல் அமர்வார்.

அப்படியே நம் உணவின் மேல் அமர்வார்.

ஆம். ஒருவர் கொசு. அடுத்தவர் ஈ. அவர்கள் அவனைத் தாக்க பல முறை முயன்றார்கள்.

ஆனந்தன் சுத்தமாக இருந்ததால்...

அவர்களால் தாக்க முடியவில்லை.

"இன்றும் அவனைக் கடிக்க முடியவில்லையே!" கொசுக்கள் புலம்பின.

"எங்களால் வீட்டிற்குள் நுழையவே முடியவில்லை!" எலிகளும் அழுதன.

"நம்மை அண்ட விடாத ஆனந்தனை ஒரு கை பார்க்க வேண்டும்! "

ஈக்கள் எரிந்து விழுந்தன. இந்தக் கூட்டணி வெற்றி பெறுமா?

## சொல்லுங்கள்

- ஆனந்தனின் எதிரிகள் யார்? யார்?
- கொசு கடிக்காமலிருக்க ஆனந்தன் என்னென்ன செய்தான்?
- வீட்டிற்குள் ஈக்கள் நுழையாமல் இருக்க ஆனந்தன் என்னென்ன செய்தான்?

## கண்டுபிடியுங்கள்

- பாடிப்பாடி பறப்பேன்.
  பறந்து வந்து கடிப்பேன். - நான் யார்?
- பறந்து பறந்து வருவேன்.
  அழுக்கின் மேல் அமர்வேன்.
  உணவின் மேல் அமர்வேன். - நான் யார்?

## சுத்தமாக இருக்க என்னென்ன செய்வாய்?

- எண்ணெய் தேய்ப்பேன்.
- குளிப்பேன்.
- தலை சீவுவேன்.
-
-

## எழுதுங்கள்

- மாதிரியைப் போன்று மாற்றி எழுதுங்கள்.

**மாதிரி :**

| | | |
|---|---|---|
| இறங்கினான் | - | இறங்குவான் |
| பெருக்கினான் | - | .......................... |
| .......................... | - | சிரிப்பான் |
| .......................... | - | செய்வான் |
| கட்டினான் | - | .......................... |

## நான் தினமும் செய்வது.... ( ✓ ) அடையாளமிடுங்கள்

| | | | |
|---|---|---|---|
| பல் துலக்குதல் | காலையிலும் மாலையிலும் | 3 | |
| | காலையில் மட்டும் | 2 | |
| | பல் துலக்குவதில்லை | 1 | |

| | | | |
|---|---|---|---|
| குளித்தல் | தினமும் இரு முறை | 3 | |
| | தினமும் ஒரு முறை | 2 | |
| | தினமும் குளிப்பதில்லை | 1 | |

| | | | |
|---|---|---|---|
| கழிவறைக்குச் செல்லுதல் | எப்பொழுதும் செருப்பு அணிவேன் | 3 | |
| | எப்பொழுதாவது அணிவேன் | 2 | |
| | செருப்பு அணிவதில்லை | 1 | |

| | | | |
|---|---|---|---|
| சுத்தமான ஆடை அணிய | கவனம் செலுத்துவேன் | 3 | |
| | ஓரளவு கவனம் செலுத்துவேன் | 2 | |
| | கவனம் செலுத்துவதில்லை | 1 | |

நான் பெற்ற புள்ளிகள்

என் தீர்மானங்கள்

## எத்தனை சொற்கள்?

**இறங்கினான், தொட்டான், வைத்தான்**

பாடப் பகுதியிலுள்ள இது போன்ற சொற்களைக் கண்டுபிடியுங்கள்.

..............................................................................................................................................

..............................................................................................................................................

## நானும் நாங்களும்

| | |
|---|---|
| ஈ பறந்தது. | ஈக்கள் <u>பறந்தன.</u> |
| கொசு கடித்தது. | கொசுக்கள் ________ |
| எலி ஓடியது. | எலிகள் ________ |
| | |

## கண்டுபிடியுங்கள்

அஞ்சு, பஞ்சு, பிஞ்சு

கொஞ்சம், தஞ்சம், பஞ்சம்


- இச்சொற்களை நன்கு கவனியுங்கள்; நீங்கள் கண்டுபிடித்த உண்மை என்ன?


- இதுபோல் எத்தனை சொற்களை உங்களால் இரண்டு நிமிடத்திற்குள் சொல்ல முடியும்?

# ஐயோ! என்ன நடக்கும்?







பறந்து பறந்து
இறக்கை
வலிதான் மிச்சம்!
உட்காரகூட
இடமில்லையே...!
நாங்கள் இனி
இந்தப் பக்கம்
வரவே மாட்டோம்!


இந்தப் புகைக்கெல்லாம்
நாங்கள் பயப்படமாட்டோம்!


என்னிடமே சவாலா?
இனி எப்படி முட்டை இடுவாய்?


ஜெயித்துவிட்டதாக நினைக்காதே!
பொறுத்திருந்து பார்...!

## சொல்லுங்கள்

- குப்பைத் தொட்டியிலிருந்து என்னென்ன படைகள் கிளம்புகின்றன?
- அவை யாரைத் தாக்கப் போகின்றன?
- ஆனந்தன் மேல் கொசுகளுக்குக் கோபம் வரக் காரணம் என்ன?
- ஆனந்தன் எலிப்படையை எப்படி விரட்டினான்?
- ஈப்படை ஏன் திரும்பிப் பறக்கிறது?
- ஆனந்தன் எவற்றையெல்லாம் சுத்தம் செய்கிறான்?
- அவற்றை ஏன் சுத்தம் செய்கிறான்?

## கதை சொல்லுங்கள்

குப்பைத் தொட்டி

எலிகளும் கொசுக்களும் கூடியிருந்தன.

“இந்த ஆனந்தனுக்குப் பயங்கரத் தலைக்கனம்.

அவன் படு சுத்தக்காரனாம்!

நம்மால் அவனை ஒன்றும் செய்ய முடியாதாம்!” எலிகள் புலம்பின.

“நாம் யார் என்று காட்டணும்! அதுவும் இப்பொழுதே காட்டணும்!”

ஈக்கள் கூச்சலிட்டன.

“சரி சரி, போருக்குப் புறப்படுவோம்! ஆனந்தனை ஒருகை பார்ப்போம்!”


கொசுக்கள் கூறின.


- படங்களைப் பார்த்துக் கதையைத் தொடர்ந்து சொல்லுங்கள்.

## வேறு யார்? யார்?

- உங்கள் வீட்டிலுள்ள தீங்கு செய்யும் உயிரினங்களில் எவை எல்லாம் இந்தக் கதையில் இல்லை?

# எது நல்ல வீடு?







- இவற்றுள் எந்த வீடு நல்ல வீடு? ஏன்?

- முதல் வீடு நல்ல வீடாக மாற என்னென்ன செய்ய வேண்டும்?

- இரண்டாம் வீடு நல்ல வீடாக மாற என்னென்ன செய்ய வேண்டும்?

## என் வீட்டில் ✔


| | உண்டு | இல்லை |
|---|---|---|
| எலி | | |
| ஈ | | |
| கொசு | | |
| கரப்பான் பூச்சி | | |
| -------- | | |
| -------- | | |

## இவர்கள் பேசினால்



என் பெயர் சுண்டெலி. வீடுகளில் ஒளிந்திருப்பேன். எல்லா உணவுப்பொருள்களையும் தின்பேன். அவற்றில் சிறுநீர் கழிப்பேன். எலிக் காய்ச்சல், பிளேக் ஆகிய நோய்களைப் பரப்புவேன்.





# ஊரை விட்டே துரத்துவேன்!



மருத்துவமனை.

குழந்தைகள் நலப் பிரிவு.

வரிசையாகக் கட்டில்கள்.

கட்டில்களில் சிறுவர்களும் சிறுமிகளும்!

அருகில் அவரவர் அம்மா.



“ம்...அம்மா... ஐயோ...”

ஆனந்தன் முனகிக் கொண்டுப் படுத்திருக்கிறான்.

அவனது முகம் கசங்கிய பூப்போல் வாடியிருந்தது.

உதடுகள் வறண்டு கிடந்தன.



“ம்ம்... அம்மா குளிருது!”

அம்மா கம்பளியை நன்றாகப் போர்த்திவிட்டார்.



“இது மருத்துவர் வரும் நேரம்
எல்லாரும் அவரவர் இடத்திற்குச்
செல்லுங்கள்”

செவிலியர் ஒருவர் அறிவிப்பு செய்தபடி வந்தார்.



மருத்துவர் வந்தார். ஆனந்தனைப் பரிசோதித்தார்.

“டாக்டர், நான் மிகவும்
சுத்தமாக இருப்பவன்.

எனக்கு எப்படிக் காய்ச்சல் வந்தது?"

ஆனந்தன் புரியாமல் கேட்டான்.

"காய்ச்சல் வர ஏதாவது காரணம் இருக்கும்.

பக்கத்து வீட்டில் யாருக்காவது காய்ச்சல் வந்திருக்கிறதா?"

"ஆம், செல்வனுக்குக் காய்ச்சல்.

நான் அவனைப் பார்க்கப் போயிருந்தேன்"

"ஆம் அதுதான் காரணம்.

தொற்றுநோய்கள் இப்படித்தான்.

ஒருவரிடமிருந்து வேறொருவருக்குத்

தொற்றிக்கொள்ளும்.

எச்சரிக்கையாக இருக்க வேண்டும்".

மருத்துவர் ஆனந்தனுக்கு ஊசி போட்டார்.



'செல்வனிடமிருந்து எனக்குக் காய்ச்சல் தொற்றியது. ஆனால் செல்வனுக்கு எப்படிக் காய்ச்சல் வந்தது?' ஆனந்தன் சிந்திக்கத் தொடங்கினான்.

'ஓ! அவன் வீட்டுக்கு அருகில் குப்பைத் தொட்டி இருக்கிறது!'

காரணத்தைக் கண்டுபிடித்தான்.

'நாம் மட்டும் சுத்தமாக இருந்தால் போதாது.

பக்கத்திலுள்ளவர்களும் சுத்தமாக இருக்க வேண்டும்.

பக்கத்திலுள்ளவர்கள் மட்டும் சுத்தமாக இருந்தால் போதாது.

சுற்றுப்புறமும் சுத்தமாக இருக்க வேண்டும். அதற்கு என்ன வழி?'

அவன் சிந்தித்தான்.

அவன் மனதில் திட்டம் ஒன்று உருவானது.



JT 395-5/Tamil-2 (Vol-1)

## சொல்லுங்கள்

- ஆனந்தன் சிந்தனையில் என்னென்ன தோன்றியிருக்கும்?
- “தொற்றுநோய்கள் இப்படித்தான். ஒருவரிடமிருந்து வேறொருவருக்குத் தொற்றிக்கொள்ளும்.” மருத்துவர் கூறினார். எவ்வாறு தொற்றிக்கொள்ளும்?
- சுற்றுப்புறம் சுத்தமாக இருக்க ஆனந்தனின் மனதில் உருவான திட்டம்என்ன?

## எதிர்ச்சொல் எழுதுங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அருகில் | X | | புரியும் | X | |
| சுத்தம் | X | | சூடு | X | |

## வினாக்கள் உருவாக்குங்கள்

- ‘ஆம்’ அல்லது ‘இல்லை’ என்று பதில் வரும் எத்தனை கேள்விகளை உருவாக்க முடியும்?

**மாதிரி :**

- நீ தினமும் குளிப்பாயா?
- வெயில் காலத்தில் கம்பளி ஆடை அணியலாமா?
- கழிவறைக்குச் செல்லும்போது காலணி அணிந்து செல்வாயா?
- ..........................................................................................

## எத்தனை சொற்கள்?

- நோய் தொடர்பான எத்தனை சொற்களை இரண்டு நிமிடத்திற்குள் எழுத முடியும்?

| | | |
|---|---|---|
| மருந்து | | |
| | | |

## மாற்றி எழுதுங்கள்

- மாதிரியைப் போன்று வாக்கியங்களை மாற்றி எழுதுங்கள்.

**மாதிரி :**

- நான் சுத்தமாக இருந்தால் மட்டும் போதாது.
  நீயும் சுத்தமாக இருக்க வேண்டும்.
- நான் நன்றாகப் படித்தால் மட்டும் போதாது.
  ---------------------------------------
- ---------------------------------------
  நீங்களும் நன்றாகச் சாப்பிட வேண்டும்.

## என்ன செய்யலாம்?

- உங்கள் பள்ளிச் சுற்றுப்புறத்தைப் பாருங்கள்.
- என்னென்ன அசுத்தங்கள் உள்ளன? அவற்றை அகற்ற என்ன செய்யலாம்?

## இணைத்து எழுதுங்கள்

- கீழ்வரும் சொற்களை 'உம்' சேர்த்து எழுதுங்கள்.

➡ சிறுவர்கள், சிறுமிகள் - சிறுவர்களும் சிறுமிகளும்

➡ மருத்துவர், செவிலியர் - ---------- -----------

➡ அம்மா, மகன் - ---------- -----------

➡ பசு, கன்று - ---------- -----------

➡ எலி, பூனை - ---------- -----------

# வசந்தம் வந்தது



நண்பர்கள் எல்லோரும் கூடியிருந்தனர்.

"ஆனந்தா, நீ மிகவும் சுத்தமாக இருப்பவன்.

உனக்கு எப்படிக் காய்ச்சல் வந்தது?"
பாத்திமா கேட்டாள்.

"அவரவர் சுத்தமாக இருந்தால் மட்டும் போதாது.

நம் சுற்றுப்புறமும் சுத்தமாக இருக்க
வேண்டும்.

நம் சுற்றுப்புறம் சுத்தமாக
இருந்தால் மட்டும் போதாது.

நம் அண்டை வீடும் சுத்தமாக இருக்க
வேண்டும்.

இதுதான் காய்ச்சல் எனக்குக் கற்பித்த பாடம்"

"நம் தெருவில் ஐந்து பேருக்குக் காய்ச்சல் வந்துள்ளது. இந்தக் கொசுக்களின் தொல்லை தாங்கமுடியவில்லை. என்ன செய்வது?" பாத்திமா கேட்டாள்.

"குப்பையை வீதியில் கொட்டக் கூடாது."

"அப்படி என்றால் குப்பையை என்ன செய்யணும்?"

"குப்பை உருவாகாமல் பார்ப்பதுதான் ஒருவழி."

"அதைவிட முக்கியம் கொசு பெருகுவதை ஒழிக்க வேண்டும்".

"அது எப்படி?"

"சிரட்டை, டயர், உடைந்த பாத்திரங்கள் போன்றவற்றில் தண்ணீர் தேங்கி நிற்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும்".

"சாக்கடையைச் சுத்தம் செய்ய வேண்டும். தண்ணீர் வடிந்து போவதற்கு வழி செய்ய வேண்டும்."

 "அதற்குப் பதில் சாக்கடை நீரை வீட்டுத் தோட்டத்திற்குப் பயன்படுத்த வேண்டும்."

“ஆம் அது நல்ல திட்டம்.”

“எல்லா வீடுகளிலும் ஜன்னல்களில் கொசு வலையிட வேண்டும்.”

“கட்டிலுக்கும் கொசுவலை வேண்டும்.”

“வீட்டுக்கு ஒரு எலிப்பொறி வேண்டும்.”

“ ................................................................................................................ ”

ஆளாளுக்கு ஒவ்வொரு வழியைச் சொன்னார்கள்.

“நல்ல கருத்துகள் பல வந்துள்ளன. ஆனால்....” செல்வன் நிறுத்தினான்.

“ஆனால்... என்று ஏன் நிறுத்திவிட்டாய்? இதற்கு என்ன தடை ஏற்படப் போகிறது” ஒரு நண்பன் கேட்டான்.

“சொல்வது எளிது. சொல்வது போல் செய்ய வேண்டுமே! அதுதானே முக்கியம்.” செல்வன் சொன்னான்.

“நாங்கள் தெருவைக் கூட்டுவோம்” ஐந்து பேர் கைகளை உயர்த்தினர்.

“சாக்கடையைச் சுத்தம் செய்யும் பொறுப்பை நாங்கள் செய்கிறோம்.”

வேறு சிலர் கைகளை உயர்த்தினர். “கொஞ்சம் சிந்தித்துச் சொல்லுங்கள்”

“ஏன்?”

“ஒரு நாள் மட்டும் செய்தால் போதாதே.



எல்லா நாளும் தொடர்ந்து செய்ய வேண்டும். முடியுமா?"

"ஒரு வாரம் நாங்கள் செய்தால் அடுத்த வாரம் நீங்கள் செய்யுங்கள்"

"மிக நல்லது."

"எப்போது தொடங்கலாம்?"

"நல்ல செயலைச் செய்ய ஏன் தாமதிக்க வேண்டும்? இப்பொழுதே தொடங்கலாம்."

நண்பர்கள் வேலை செய்யத் தொடங்கினர்.

சில நாட்களில்....



துர்நாற்றம் வீசும் குப்பைத் தொட்டியைக் காணோம்.

அது நறுமணம் வீசும் பூத்தொட்டியாக மாறியிருந்தது. வசந்தம் மலர்ந்தது.

ஈ கொசு, எலி... ஆகியவை வேறு ஊருக்குப் பறந்தோடி விட்டன.

## சொல்லுங்கள்

- உங்களுக்குக் காய்ச்சல் வந்துள்ளதா?
- எப்படிக் காய்ச்சல் வந்தது?
- காய்ச்சல் குணமாக என்ன செய்தீர்கள்?
- உங்களுக்கு வயிற்றுவலி வந்துள்ளதா?
- எப்படி வந்தது?
- குணமாக என்ன செய்தீர்கள்?

## என்ன செய்வீர்கள்?

- ஆனந்தனின் ஊரிலிருந்து விரட்டப்பட்ட எலிகளும் ஈக்களும் கொசுக்களும் உங்கள் ஊருக்கு வந்தால் எங்கெங்குக் குடியேறும்?
- அவற்றை விரட்ட என்னென்ன செய்வீர்கள்?
- உங்களால் மட்டும் முடியுமா?
- வேறு யார் யார் உதவி தேவைப்படும்?

## எழுத முடியுமா?

- கொடுக்கப்பட்டுள்ள மாதிரியைப் போல் எத்தனை வாக்கியங்கள் எழுத முடியும்?

**மாதிரி 1**

- நாம் மட்டும் சுத்தமாக இருந்தால் போதாது.
  நம் சுற்றுப்புறமும் சுத்தமாக இருக்க வேண்டும்.

- ------------------------------------------
  ------------------------------------------

- ------------------------------------------
  ------------------------------------------

மாதிரி 2

- குப்பையை வீதியில் கொட்டக் கூடாது.

  அப்படி என்றால் குப்பையை என்ன செய்யணும்?

- ---------------------------------------------

  ---------------------------------------------

- ---------------------------------------------

  ---------------------------------------------

## நான் கண்டுபிடித்தது

| | |
|---|---|
| சுத்தம் | அசுத்தம் |
| சைவம் | அசைவம் |
| நீதி | அநீதி |
| ஜீரணம் | அஜீரணம் |

- மேலே கொடுக்கப்பட்டுள்ள சொற்சோடிகளைக் கவனித்துப் பாருங்கள். நீங்கள் கண்டுபிடித்தது என்ன?

  ---------------------------------------------

  ---------------------------------------------

## சொற்கள் உருவாக்குங்கள்

- பொருத்தமான ஒலித் துணைக் குறியீடுகள் சேர்த்து எத்தனை சொற்களை உங்களால் உருவாக்க முடியும்?

  ⇨ க ச : கசை, காசு, கூசு, கொசு

  ⇨ ச க : --- ---- ----- -----

  ⇨ க ல : --- ---- ----- -----


  ⇨ க ள : --- ---- ----- -----

# 4

# உயிர் வாழ...



# வழி என்ன?



வெள்ளைக்கோழிக்குப் பத்துக் குஞ்சுகள்.
அவை காட்டில் வாழ்ந்து வந்தன.
குப்பைமேடு, குளக்கரை, தோட்டம்
என எங்கும் நடந்து சென்றன.
இரை தேடின; இன்பமாய் இருந்தன.


நாட்கள் நகர்ந்தன.
குஞ்சுகள் பெரிதாயின.
பத்தும் பத்துப் பத்து முட்டையிட்டன.
அவை அடைகாத்தன.



ஒன்று, இரண்டு, மூன்று... நாட்கள் நகர்ந்தன.
இருபத்தியொன்றாம் நாள்...
"கீச்..கீச்..கீச்..." குஞ்சுகள் வெளிவந்தன.
நூறு அழகான குஞ்சுகள்!
கோழிக்குடும்பத்தில்
நூற்றிப்பதினோரு பேர்.

'எல்லோருக்கும் உணவு வேண்டுமே?'
வெள்ளைக்கோழி கவலைப்பட்டது.
"கீச்...கீச்... கீச்..." குஞ்சுகள் அழுதன.
இங்கும் அங்கும் ஓடின.





"கொக்... கொக்... கொக்... பசிக்கிறது"

என்று அழுதன.

வெள்ளைக்கோழி


குப்பைமேட்டைக் கிளறியது.

ஆழக் கிளறியது.

ஒரேயொரு மண்புழு கிடைத்தது.

"கொக்.. கொக்... கொக்..."

குஞ்சுகள் ஓடிவந்தன.



முதலில் வந்த குஞ்சு மண்புழுவைக்

கொத்திக் கொண்டு ஓடியது.

மற்ற குஞ்சுகள் அதைத் துரத்திக்கொண்டு ஓடின.

மண்புழுவைப் பிடுங்கின.

'என் குடும்பத்தின் நிலைமை

இப்படியாகி விட்டதே!'

அது கவலைப்பட்டது.

'உணவு எங்கே கிடைக்கும்?' யோசித்தது.

"வாருங்கள்... வீட்டுக்குள் செல்வோம்.

அறைக்குள் மூட்டை மூட்டையாய்

தானியங்கள் உள்ளன"

வெள்ளைக்கோழி

குஞ்சுகளை அழைத்தது.





“ஆகா... மூட்டை மூட்டையாய்
தானியங்கள்...
தின்றுத் தின்றுப் பசியாறலாம்”
குஞ்சுகள் மகிழ்ந்தன.
வெள்ளைக்கோழியின்
பின்னால் ஓடின.

“ச்சூ... ச்சூ... போ... போ... கோழி
போ...” வீட்டினர் விரட்டினர்.
தடியெடுத்து விரட்டினர்.

ஆசையோடு போனவர்கள்
ஏமாந்து திரும்பினர்.
“கொக்... கொக்... கொக்.. கொக்”
குஞ்சுகள் உரக்க அழுதன.

வெள்ளைக் கோழிக்குப்
பொறுக்க முடியவில்லை.
அவர்களுக்கு மட்டும்



இவ்வளவு தானியங்கள் எப்படிக்
கிடைத்தன?
பிற கோழிகளை அழைத்தது;
ஆலோசித்தது.
வயலுக்குச் சென்று பார்த்தது;
வேலைகளைக் கவனித்தது.

இறுதியில் கோழிக்குடும்பம்
வேளாண்மை செய்ய முடிவு செய்தது.



## சொல்லுங்கள்

- வயலில் வேளாண்மை செய்வதைப் பார்த்திருக்கிறீர்களா?
- வேளாண் வேலைகள் என்னென்ன?
- உங்கள் வீட்டில் வேளாண் வேலை செய்பவர்கள் உள்ளனரா?
- வீட்டினர் கோழியை விரட்டியது சரியா?
- உங்களுக்கு எத்தனை தானியங்களின் பெயர்கள் தெரியும்?

## எழுதுங்கள்

- உங்கள் பகுதிகளில் விளையும் பயிர்களின் பெயர்களை எழுதுங்கள்.

........................................ ........................................

........................................ ........................................

## வரிசைப்படுத்துங்கள்

- வேளாண் வேலைகளை வரிசைப்படுத்துங்கள்.

→ களை எடுத்தல் ........................................

→ நீர்ப் பாய்ச்சுதல் ........................................

→ அறுவடை செய்தல் ........................................

→ ஏர் உழுதல் ........................................

→ நாற்று நடுதல் ........................................

→ உரம் இடுதல் ........................................

## எண் பெயர்களை எழுதுங்கள்

- எண்ணின் பெயர்களை எழுதுங்கள்.

11 - பதினொன்று　15 - பதினைந்து　50 - ஐம்பது

90 - ....................　49 - ....................　76 - ....................

83 - ....................　12 - ....................　99 - ....................

## வரிசைப்படுத்துங்கள்

- பாடல் வரிகளை வரிசைப்படுத்துங்கள்.

| | |
|---|---|
| கொக்கரக்கோ கோழி | ................................................................................ |
| கண் விழிக்கச் சொல்லும் | ................................................................................ |
| குஞ்சைப் பிடிக்க வரும் | ................................................................................ |
| கொத்தி இரையைத் தின்னும் | ................................................................................ |
| கொண்டைச் சேவற்கோழி | ................................................................................ |
| கழுகைக் கொத்தி விரட்டும் | ................................................................................ |
| குப்பை மேட்டைக் கிளறும் | ................................................................................ |
| காலை நேரம் கூவும் | ................................................................................ |

## சொல்லிப் பழகுங்கள்

| | | | |
|---|---|---|---|
| கரை, கறை | கோழி, கோலி | மலை, மழை | தலை, தழை |
| பலம், பழம் | காலை, காளை | வழி, வலி | இரை, இறை |


## பயன்படுத்துங்கள்


- மூட்டை மூட்டையாய்த் தானியங்கள்
- குலை குலையாய் ................................................................................
- கொத்துக் கொத்தாய் ................................................................................

## எதிர்ச் சொற்களை எழுதுங்கள்

| | |
|---|---|
| அழுதது | சிரித்தது |
| கவலைப்பட்டது | மகிழ்ச்சியடைந்தது |
| இன்பம் | ........................................................ |
| பெரியது | ........................................................ |
| மேடு | ........................................................ |

# படக்கதை




நாட்கள் நகர்ந்தன. மழைக்காலம் வந்தது.







- எறும்புகள் என்ன செய்திருக்கும்?
- வெட்டுக்கிளிகள் பசியால் கவலைப்படாமல் இருக்க என்ன செய்திருக்க வேண்டும்?
- படங்களைப் பார்த்துக் கதை சொல்லுங்கள்.

# தாவரங்கள் சிரித்தன






பொழுது புலர்ந்தது.
“வாருங்கள் தோட்டத்திற்குப் போவோம்.”
கோழிக் குஞ்சுகள் புறப்பட்டன.
சில குஞ்சுகள் “குடு குடு” வென ஓடின.
சில குஞ்சுகள் “பட பட” வெனப் பறந்தோடின.

“இன்று நான் தான் தண்ணீர்ப் பாய்ச்சுவேன்.”
ஒரு கோழிக் குஞ்சு கூறியது.
நான் களை பறிப்பேன்.” வேறொரு குஞ்சு சொன்னது.
“அதோ நம் தோட்டம்! எவ்வளவு அழகாக இருக்கிறது!”
ஒரு குஞ்சு சொன்னது.
தோட்டம் முழுக்கப் பல்வகை மரங்கள், செடிகள், கொடிகள்...
அப்போது காற்றடித்தது. இலைகள் அசைந்தன.
“தோட்டம் நம்மை வா வா என்று அழைக்கிறது.”
ஒரு குஞ்சு சொல்ல எல்லோரும் சிரித்தார்கள்.



“அந்த மிளகுக் கொடியைப் பாருங்கள்!.”
முதல் கோழிக்குஞ்சு சொன்னது.
எல்லோரும் மிளகுக் கொடியைப் பார்த்தார்கள்.
பாவம் அந்த மிளகுக் கொடி!
பற்றிப் படர ஒரு கொம்பில்லாமல்
தவித்துக்கொண்டிருந்தது.
காற்றில் அப்படியும் இப்படியும் ஆடியது.





நிமிர்ந்து நிற்க முயன்றது.
முடியாமல் சரிந்தது. மீண்டும் முயன்றது.
மீண்டும் மீண்டும் சரிந்தது.
அருகில் ஒரு மரம்.
அதன் கிளைகளில் பற்றிக்கொள்ள முயற்சித்தது.
ஆனால் எட்டவில்லை.

“ஐயோ பாவம்... அந்தக் கொடி துவண்டு விழுந்துவிடுமே.”
ஒரு குஞ்சு சொன்னது.
மிளகுக் கொடி தவிப்பதை மரம் பார்த்தது. கொடிக்கு உதவ நினைத்தது.
தன் கிளையைத் தாழ்த்தியது. மிளகுக்கொடி மரத்தின் கிளையைப்
பற்றிக்கொண்டது. இறுகப் பற்றிக் கொண்டது.




“ஆகா! மிளகுக் கொடியின் தவிப்பு நீங்கியது.
எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது.”
ஒரு கோழிக்குஞ்சு சொன்னது.
“எங்களுக்கும்தான்.” எல்லா குஞ்சுகளும் கூறின.
காற்றடித்தது.
மரம் செடி கொடிகள்
அனைத்தும் அசைந்தன.
“சல சல” என இலைகள் அசையும் ஒலி எழுந்தது.
“பார்த்தீர்களா? தாவரங்களும் சிரிக்கின்றன!”
குஞ்சுகள் கூறின; சிறகடித்து ஓடின.



## சொல்லுங்கள்



- உங்களுக்கு எத்தனை மரங்களின் பெயர் தெரியும்?
- உங்களுக்கு எத்தனை கொடிகளின் பெயர் தெரியும்?
- உங்கள் பள்ளி வளாகத்தில் என்னென்ன மரங்கள் உள்ளன?
- காற்றில் இலைகள் அசைவதைப் பார்த்த குஞ்சுகள் கூறியது என்ன?

## வகைப்படுத்துங்கள்






| | |
|---|---|
| | |
| | |
| | |
| | |







## பயன்படுத்துங்கள்

- குடுகுடு என ஓடின.
- படபட எனப் பறந்தன.
- சடசட என ..........................................
- கலகல என ..........................................
- பளபள என ..........................................
- கடகட என ..........................................



## இருபொருள்



கொடி : மரத்தில் படருது கொடி.
கம்பத்தில் பறக்குது கொடி.

நூல் : ..........................................
..........................................

அறை : ..........................................
..........................................

## சொல்லுங்கள்

“சல சல” என இலைகள் அசையும் ஒலி எழுந்தது.

“பார்த்தீர்களா? தாவரங்களும் சிரிக்கின்றன!” - குஞ்சுகள் கூறின.

- “பள பள” என மின்னும் நட்சத்திரங்களைப் பார்த்தால்....
- “பளீர் பளீர்” என மின்னும் மின்னலைப் பார்த்தால்....


கோழிக்குஞ்சுகள் என்ன கூறும்?

## ஒப்பிடுங்கள்

- அட்டவணையை நிரப்புங்கள்

| கத்திரிச் செடி | பலா மரம் |
|---|---|
| சிறியது | பெரியது |
| கிளைகள் இல்லை | |
| | |
| | |





## சொல்லுங்கள்

மிளகுக் கொடி தவிப்பதை மரம் பார்த்தது.
கொடிக்கு உதவ நினைத்தது.
தன் கிளையைத் தாழ்த்தியது.

- மிளகுக் கொடிக்கு மரம் உதவியது போல் நீங்கள் யாருக்காவது உதவியிருக்கிறீர்களா?
- என்ன உதவி செய்தீர்கள்?

## பிழைகளைத் திருத்தி எழுதுங்கள்

- வாருங்கள் தொட்டத்திற்குப் போவோம்.
- வேறொரு குஞ்சு சோன்னது.

# கதை நேரம்

## விளைவதெல்லாம்


ஓர் ஊரில் ஒரு விவசாயி இருந்தார். பரம ஏழையாகவே இருந்தார். ஏன் தெரியுமா? விவசாயம் செய்ய கடன் வாங்குவார். செல்வந்தரிடம் கடன் வாங்குவார். செல்வந்தரோ கடன் கொடுக்கும்போது ஒரு ஒப்பந்தம் போடுவார். கொடுத்த காசுக்கு ஈடாக விளைச்சலைக் கொண்டு போய் விடுவார். “ஒப்பந்தப்படிதான் நடந்துகொண்டேன்” என்று நியாயமும் பேசுவார்.

மீண்டும் விவசாயம் செய்யக் கடன் வாங்குவார். வழக்கம்போல் அறுவடையின் போது செல்வந்தர் வருவார். விளைச்சலைக் கொண்டுபோய் விடுவார். இது காலாகாலமாக நடைபெறும் வழக்கமாக இருந்தது. நம் ஏழை விவசாயிக்கு ஒரு மகன் இருந்தார். இம்முறை கடன் வாங்கச் சென்ற அப்பாவுடன் மகனும் சென்றார். ஒப்பந்தம் தயாரானது.

“மண் மேல் விளைவதெல்லாம் கடனுக்கு ஈடாக எடுத்துக் கொள்ளப்படும்” என்பதே அதன் முக்கிய சரத்து.

“நெல்லு நடலாமா? வாழை வைக்கலாமா?” அப்பா ஆலோசனைக் கேட்டார்.

“இரண்டும் வேண்டாம், குச்சி கிழங்கோ, நிலக்கடலையோ விவசாயம் செய்யலாம்” மகன் சொன்னான். பயிர் விளைந்தது. கடனை வசூலிக்கப் பணக்காரர் வந்தார். ஒப்பந்தப்படி மண்ணிற்கு மேல் உள்ளதைக் கொண்டு சென்றார். ஏமாந்து போனார்.



அடுத்த முறையும் கடன் வாங்கச் சென்றார்கள். செல்வந்தர் முந்திக் கொண்டார். “மண்ணிற்கு அடியில் விளைவதெல்லாம் கடனுக்கு ஈடாக எடுத்துக் கொள்ளப்படும்” என்று ஒப்பந்தம் போட்டார். வேறுவழியின்றி ஒத்துக்கொண்டனர்.

“என்ன செய்வது?”

தந்தை கவலைப் பட்டார்.


“ஏன் கவலைப்படுகிறீர்கள்? ————————”

என்றான் மகன். அப்பா சிரித்தார்.

# செடியில் அற்புதம் கண்டேன்

தோட்டத்துக்குச் செல்லும் வழியில்
தொட்டால் சிணுங்கிச் செடியைப் பார்த்தேன்
நாட்டம் கொண்டு அதன் அருகே
நானும் சென்று தொட்டுப் பார்த்தேன்

செடியை நானும் மெல்லத் தொட்டேன்
சேர்ந்து இலைகள் மூடக் கண்டேன்
நொடியில் சுருங்கிய செடியைக் கண்டு
நானும் அருகில் நன்கு அமர்ந்தேன்.



மெல்ல நானும் மீண்டும் தொட்டேன்
மீண்டும் இலைகள் சுருங்கக் கண்டேன்
மெல்ல மெல்ல மீண்டும் தொட்டேன்
மீண்டும் மீண்டும் சுருங்கக் கண்டேன்

எத்தனை எத்தனை செடிகள் கண்டேன்!
அத்தனை செடியிலும் அற்புதம் கண்டேன்!
செடியும் கொடியும் மரங்களுமே- நாம்
செழிப்பாய் வாழ உதவிடுமே!

## சொல்லுங்கள்

- தொட்டால் சிணுங்கிச் செடியைத் தொட்டுப் பார்த்ததுண்டா?
- உங்களுக்கு மிகவும் பிடித்த செடி எது? ஏன்?
- வாடிய இலை மீண்டும் பழைய நிலைக்கு வருமா?
- எப்படிக் கண்டுபிடிக்கலாம்?
- தொட்டால் சிணுங்கியின் பூவை உற்றுப்பார்த்தது உண்டா?
- தொட்டால் சிணுங்கியைப் போன்ற வியக்க வைக்கும் வேறு தாவரங்கள் தெரியுமா?

## பாராமல் பாடலமா?

- பாடலிலுள்ள எத்தனை வரிகளைப் பாராமல் பாடமுடியும்? முயற்சி செய்யுங்கள்.

## சொல்லுங்கள்



- சூரியகாந்திப் பூவைப் பார்த்திருக்கிறீர்களா?
- அதற்கு அப்பெயர் வரக் காரணம் என்ன?



- தாமரைப் பூவைப் பார்த்திருக்கிறீர்களா?
- அதன் சிறப்பு என்ன?
- தாமரை தண்ணீரிலே இருந்தும் ஏன் அழுகிப் போவதில்லை?

## கவனியுங்கள்

- தொட்டால் சிணுங்கி இலையைக் கவனித்துப் பாருங்கள்.
- அதன் நுனி கூர்மையாக இருக்கிறதா? வட்டமாக இருக்கிறதா?
- இலையின் நுனி வட்டமாக இருக்கும் எத்தனை தாவரங்கள் பள்ளி வளாகத்தில் உண்டு?
- இலையின் ஓரம் பற்கள் போன்றிருக்கும் எத்தனை தாவரங்கள் உங்களுக்குத் தெரியும்?
  - பள்ளி வளாகத்திலுள்ள தாவரங்களைக் கவனியுங்கள். இக்கேள்விகளுக்கான பதில்களைக் கண்டுபிடியுங்கள்.

## கண்டுபிடியுங்கள்

- கீழ்வரும் சொற்களின் பொருள் தரும் சொற்களைப் பாடலிலிருந்து கண்டுபிடியுங்கள்; எழுதுங்கள்.
  - ஆர்வத்தோடு ------------------
  - உட்கார்ந்தேன் ------------------
  - வளமாய் ------------------
  - மறுபடியும் ------------------

## எதிர்ச்சொல் கூறுங்கள்

- அருகே ------------------
- மெல்ல ------------------
- சேர்ந்து ------------------
- அருகில் ------------------
- சுருங்கிய ------------------

# மெழுகு போன்ற வாழை

மெழுகுவர்த்தி எரிந்து கொண்டிருந்தது. அவ்வெளிச்சத்தில் அமுதா படித்துக் கொண்டிருந்தாள். அவளது அண்ணன் மணிமாறன் அங்கு வந்தான்.

மணிமாறன் : என்ன செய்துகொண்டிருக்கிறாய் அமுதா?

அமுதா : தாவரங்களைப் பற்றிப் படித்துக் கொண்டிருக்கிறேன் அண்ணா!

மணிமாறன் : தாவரங்கள் பற்றி என்ன தெரிந்து கொண்டாய்?

அமுதா : தாவரங்கள் நமக்குப் பல உதவிகள் செய்கின்றன.

மணிமாறன் : உனக்குப் பிடித்த தாவரம் எது?

அமுதா : எல்லாத் தாவரங்களும் எனக்குப் பிடிக்கும்!

மணிமாறன் : ஏன்?



அமுதா : சில உணவாகப் பயன்படுகின்றன. வேறு சில மருந்தாகப் பயன்படுகின்றன.

மணிமாறன் : தாவரத்தை அப்படியே சாப்பிடுவாயா?

(மணிமாறன் கேலி பேசினான். அமுதாவுக்குக் கோபம் வந்தது)

அமுதா : நீ வேண்டுமானால் அப்படியே சாப்பிடுவாய்!

சில தாவரங்களின் இலையைச் சாப்பிடுவேன்.

சிலவற்றின் பூவை உண்பேன். சிலவற்றின் காயைத் தின்பேன்.

சிலவற்றின் கனிகளைப் புசிப்பேன்.

மணிமாறன் : போதும்... போதும்! உனக்குத் தெரிகிறதா என்று அறியத்தான் அப்படிக் கேட்டேன்.


அமுதா : (சிரித்துக் கொண்டே)
இந்த மெழுகுவர்த்தியின் சிறப்பென்ன?

மணிமாறன் : நமக்கு வெளிச்சம் தருகிறது.

உருகி உருகி தன்னையே அழித்துக்கொள்கிறது.

அப்படிப்பட்ட ஒரு தாவரம் உண்டு. அது எது?

(முகவாயில் கை வைத்து மணிமாறன் சிந்தித்தான்)



அமுதா : அதுதான் வாழைமரம்.

மணிமாறன் : எப்படி?

அமுதா : மெழுகுவர்த்திக்குக் கிளைகளில்லை.

வாழைக்கும் கிளைகளில்லை.

குலை தள்ளியதும் தன்னை அழித்துக்கொள்கிறது.

மெழுகுவர்த்தியோ தன்னை அழித்துக்கொண்டு வெளிச்சம் தருகிறது.

மணிமாறன் : (கை தட்டிப் பாராட்டியபடி) நன்று! நன்று!

## சொல்லுங்கள்

- 'வாழை மெழுகுவர்த்தியைப் போன்றது' என்பது சரியா? ஏன்?
- வாழையின் எந்தெந்தப் பகுதிகளை நாம் பயன்படுத்துகிறோம்?
- எதற்கெல்லாம் பயன்படுத்துகிறோம்?
- எந்தெந்தத் தாவரங்களின் இலைகளை நாம் உணவாகப் பயன்படுத்துகிறோம்?

## தாவரங்களின் வருத்தம்

**பனை :** வீடு மேய ஓலை கொடுப்பேன்.
வெயிலுக்கு இனிய நுங்கு கொடுப்பேன்.
ஆனால் யாரும் என் நிழலில் இளைப்பாறுவதில்லை!

**முருங்கை :** கறி சமைக்க இலை கொடுப்பேன்.
கறி சமைக்கக் காய் கொடுப்பேன்.
கறி சமைக்கப் பூவும் கொடுப்பேன்.
ஆனால் குழந்தைகள் ஏறி விளையாடுவதில்லை!

**வாழை :** ..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

**கீரை :** ..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

## பட்டியலிடுங்கள்

தாவரங்களின் எந்தப் பாகத்தை அதிகம் உணவாகப் பயன்படுத்துகிறோம்?

| இலை | காய் | கனி | தண்டு | வேர் |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

## சொல்லுங்கள்

ஆசையோடு போனவர்கள் ஏமாந்து திரும்பினர்.
"கொக்... கொக்... கொக்.. கொக்"
குஞ்சுகள் உரக்க அழுதன.

- நீங்கள் ஆசைப்பட்டு ஏமாந்ததுண்டா?
- என்னென்ன ஆசையோடு போயிருக்கிறீர்கள்?
- எப்படி ஏமாந்தீர்கள்?
- ஏமாற்றம் வந்தால் என்ன செய்வீர்கள்?
- இறுதியாக என்ன தீர்மானம் எடுத்தீர்கள்?

## பிழைகளைத் திருத்தி எழுதுங்கள்

- கொழி வந்தது
- கெக்கைப் பார்த்தது
- "மீண் வேண்டுமானால் குளத்திற்கு பே" என்றது.
- குளத்தில் மண்புலுவைப் பார்த்தது.
- கெத்தி கெத்தி தின்றது.

## எழுதுங்கள்

**'மேலே, உள்ளே, முன்னால்....'**

இதுபோல் 'இருப்பிடத்தைக்' குறிக்கும் எத்தனை சொற்களை இரண்டு நிமிடத்திற்குள் எழுத முடியும்?

## கண்டுபிடியுங்கள்

பொருத்தமான ஒலித்துணைக்குறியீடுகள் சேர்த்துச் சரியான சொல்லைக் கண்டுபிடித்து எழுதுங்கள்.

மாதிரி:

- **வ ழ - வாழை**
- ம ர ங க -
- ப ன -
- க ர -
- த ன ன -

## பாடலைப் பூர்த்திச் செய்யுங்கள்

விதை விதைத்தால் மட்டும் போதாது

வேண்டும் தண்ணீர் நாமும் ஊற்றிடணும்.

தண்ணீர் ஊற்றினால் மட்டும் போதாது

களை வந்தால் வெட்டி நீக்கிடணும்.

_________________________________

_________________________________

_________________________________

_________________________________

## பாடி மகிழ

சின்னக்குருவி... செல்லக்குருவி
எங்கே போகிறாய்?
பல்லில்லா பையனை- நான்
பார்க்கப் போகிறேன்.

சின்னக்குருவி... செல்லக்குருவி
எங்கே போகிறாய்?
குளமில்லா ஊரில் - நான்
குடியேறப் போகிறேன்.

சின்னக்குருவி... செல்லக்குருவி
எங்கே போகிறாய்?
இலையில்லா மரத்தில் - நான்
இருக்கப் போகிறேன்.

சின்னக்குருவி... செல்லக்குருவி
எங்கே போகிறாய்?
மரமில்லாக் காட்டில் - நான்
கூடுகட்டப் போகிறேன்.